22 OCT 2020
026797

-353

**சுருக்கம்**

பணியமைப்பு – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு. போ. விவேக், த/பெ. டி.ஜே. போஜன் (லேட்), முன்னாள் தொழில் கூட்டுறவு அலுவலர், இண்ட்கோசர்வ் அலுவலகம், குன்னூர், நீலகிரி – தொழில் வணிகத் துறையில் தருமபுரி மாவட்ட தொழில் மையத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (பணிII(1)) துறை**

அரசாணை (டி) எண். 67

நாள் 13.10.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம், புரட்டாசி 27

படிக்க:

1. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.24911/பஆ1/2007, நாள் 31.12.2013.
2. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 02.03.2016.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
4. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் கடித நக எண்.24911/இபி1/2007, நாள் 9.02.2015, 04.06.2015, 21.06.2019, 18.10.2019 மற்றும் 18.12.2019.
5. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.

---

ஆணை:–

மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 01.02.2016 க்கு முன்னர் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணி விதித்தளர்வுகள் ஏதுமில்லை என்ற நிலையில் நியமன அலுவலரளவில் வரன்முறை செய்யலாம் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவர்களின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் செயல்முறை ஆணையின்படி திரு. போ. விவேக் என்பவர் தொழில் வணிகத் துறையில் தருமபுரி

மாவட்டத் தொழில் மையத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக 10.01.2014 அன்று முற்பகல் பணியேற்பு செய்துள்ளார். எனவே, தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசின் ஆணை வழங்கக் கோரி தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் மேலே நான்கில் படிக்கப்பட்ட தனது கடிதங்கள் வாயிலாக அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி வைத்துள்ளார்.

4. மேற்காணும் சூழ்நிலையில், தனியரின் கருணை அடிப்படையிலான பணி நியமனம் தொடர்பான அனைத்து ஆவணங்களும் கவனமாக ஆய்வு செய்ததில், அரசு ஊழியர் (லேட் திரு. டி.ஜே. போஜன், முன்னாள் தொழில் கூட்டுறவு அலுவலர், இண்ட்கோசர்வ் அலுவலகம், குன்னூர், நீலகிரி) இறந்து (16.07.2000) மூன்று ஆண்டுகள் நிறைவடைந்த பின், தனியர் கருணை அடிப்படையிலான பணி வேண்டி விண்ணப்பம் (07.05.2007) செய்தமையால், தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்கு மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 4–ல் உள்ள வழிகாட்டுதலின்படி (Time Limit to Prefer the Application) அதாவது, இந்நேர்வில் தனியர் பொருட்டு கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் செய்வதற்கான காலக் கெடுவினை தளர்வு செய்து, தருமபுரி மாவட்டத் தொழில் மையத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. போ. விவேக் அவர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாளான 10.01.2014 முற்பகல் முதல், அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இது குறித்த உரிய பதிவுகள் தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண்.15081/க்யூ1/2020–1, நாள் 01.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, அ.சா.எண்.24863/ஜி1/2020–1, நாள் 06.10.2020 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**டாக்டர். கே. கோபால்**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

பெறுநர்
திரு. போ. விவேக்,
இளநிலை உதவியாளர்,
மாவட்டத் தொழில் மையம்,
தருமபுரி (2 நகல்கள்).
(தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்,
கிண்டி, சென்னை–32 அவர்கள் வழியாக).
தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்,
கிண்டி, சென்னை–32.
தலைமை கணக்கு அலுவலர்,
சென்னை–18/35.

தலைமை கணக்கு அலுவலர்,
சென்னை–18/35. (பெயரில்).
மாவட்ட கருவூல அலுவலர்,
தருமபுரி மாவட்டம்.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை,
சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,
சென்னை–9.
இ.கோ. /உதிரி (கோ. எண்.1140/பணிIII(1)/2015)

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

பிரிவு அலுவலர்